# 7

# நீதி வழுவா மன்னன்
# (நாடகம்)

(அநபாயன் என்ற பெயருடைய மன்னன் சோழநாட்டை ஆண்டு வந்தான். அவன் மனுநீதியில் தவறாதவன் ஆதலால் மனுநீதிச் சோழன் எனப்பட்டான். அவனது மைந்தன் தேரில் வீதி உலா சென்றான். அப்போது பசுக்கன்று ஒன்று அவனது தேர்ச்சில்லில் அகப்பட்டு இறந்தது. அக் கன்றின் தாய்ப்பசு அரசசபையின் ஆராய்ச்சி மணியை அடித்தது.)



**இடம் - அரசசபை**
**பாத்திரங்கள் - அரசன், அமைச்சர்கள், காவலாளிகள்.**

(பசு ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் அடிக்கிறது. அச் சத்தம் அரசனின் காதுகளில் கேட்கிறது.)

| | | |
|---|---|---|
| அரசன் | :- | அமைச்சரே, என்றும் இல்லாதவாறு இன்று என் ஆராய்ச்சி மணி ஒலிக்கிறதே. யாருக்கு, என்ன குறை நேர்ந்தது ? |
| அமைச்சர் | :- | விரைந்து அறிந்து வருவேன் மன்னா, (காவலாளி ஓடி வருகிறான்) |
| காவலாளி | :- | அமைச்சரே, தவறு நடந்து விட்டது. தவறு நடந்து விட்டது. |
| அமைச்சர் | :- | அப்படி என்ன நடந்தது? தயங்காமல் சொல். |
| காவலாளி | :- | அமைச்சரே, இளவரசர் மணித் தேரில் ஏறி உலாச் சென்றபோது..... |
| அமைச்சர் | :- | உலாச் சென்றபோது என்ன நடந்தது? சீக்கிரம் சொல். |
| காவலாளி | :- | தேரில் பசுக்கன்று ஒன்று அகப்பட்டு இறந்துவிட்டது. தாய்ப்பசு கண்ணீர்விட்டு அழுதது. ஆராய்ச்சி மணியை அடித்தது. |
| அமைச்சர் | :- | ஆ ! அப்படியா? இதோ அரசருக்கு அறிவிப்பேன். (அமைச்சர் தலைகுனிந்து அரசனிடம் செல்கிறார்.) |
| அரசர் | :- | அமைச்சரே, ஏன் தலைகுனிந்து நிற்கிறீர்கள்? |
| அமைச்சர் | :- | நடக்கக் கூடாதது ஒன்று நடந்து விட்டது, மன்னா, |
| அரசன் | :- | அப்படி என்ன நடந்தது? சொல்லுங்கள் அமைச்சரே, |
| அமைச்சர் | :- | இளவரசன் தேரில் செல்லும்போது பசுக்கன்று ஒன்று .......... (அரசன் சிம்மாசனத்திலிருந்து இறங்குகிறான்) |
| அரசர் | :- | பசுக்கன்று ஒன்று........... கூறுங்கள் அமைச்சரே. |
| அமைச்சர் | :- | பசுக்கன்று ஒன்று அகப்பட்டு இறந்துவிட்டது. |
| அரசன் | :- | எங்கே என் மகன்? அவனை இங்கே அழைத்து வாருங்கள். |
| அமைச்சர் | :- | இதோ அழைத்து வருகிறேன் மன்னா. (அமைச்சர் செல்கிறார்.) |
| அரசர் | :- | கன்றை இழந்து வருந்தும் பசுவைப் போல நானும் என் மகனை இழந்து வருந்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| அமைச்சர் | :- | என்ன கூறுகிறீர்கள் மன்னா? இளவரசன் தங்கள் வாரிசு இந்த நாட்டின் எதிர்கால மன்னர். |
| அரசன் | :- | தெரிந்துதான் கூறுகின்றேன். என் மகனையும் தேர்க்காலில் நெரித்து மரண தண்டனை வழங்குங்கள். |
| அமைச்சர் | :- | மன்னவா, அது பசுக்கன்று, இளவரசர் அரச குலத்திற் பிறந்தவர். |
| அரசர் | :- | வேடிக்கையாக இருக்கிறது அமைச்சரே! வேடிக்கையாக இருக்கிறது உங்கள் கூற்று. மன்னர் மகன் தவறிழைத்தால் மன்னிப்பு. மக்கள் தவறு செய்தால் மட்டும் தண்டனையா ? |
| அமைச்சர் | :- | மன்னிப்பிற்கும், பிராயச்சித்தத்திற்கும் மனுநீதியில் இடமுண்டு மன்னவா. |
| அரசர் | :- | அமைச்சரே என்ன உளறுகிறீர்கள்? ஓர் அரசனின் கடமை என்ன தெரியுமா? தன்னால், தன் உறவினர்களால், படையினரால், பகைவரால், கள்வரால், விலங்குகளால் தன் குடிமக்களுக்கு எவ்விதத் துன்பமும் வராமல் காக்க வேண்டும். இதை மறந்துவிட்டீர்களா? நான் என் மகனைத் தண்டிக்கத் தவறினால் மனுதர்மம் என்னாவது? |
| அமைச்சர் | :- | அரசரே, இளவரசரை அழைத்து வந்து விட்டேன். |
| அரசன் | :- | அரசன் நான் ஆணையிடுகின்றேன். இளவரசனைத் தேர்க்காலில் இடுங்கள். மரணதண்டனையை நிறைவேற்றுங்கள். |
| அமைச்சர்கள் | :- | இது கொடிய தண்டனை! மன்னா, கொடிய தண்டனை! |
| அரசன் | :- | ம்... என் ஆணையை நிறைவேற்றுங்கள. (காவலாளி இளவரசனைத் தேர்க்காலிலிடுகிறான். அங்கு ஓர் அதிசயம் நடக்கின்றது. இளவரசனும், பசுக்கன்றும் உயிர் பெற்று எழுகின்றனர்) |
| அனைவரும் | :- | அரசன் வாழ்க! அநபாயன் வாழ்க ! மனுநீதிச்சோழன் வாழ்க! |

## கிரகித்தற் பயிற்சி

**பூரண வாக்கியங்களில் விடை தாருங்கள்.**

1. மனுநீதிச் சோழன் ஆண்ட நாடு எது?
2. மனுநீதிச் சோழனின் மறுபெயர் என்ன?
3. ஆராய்ச்சி மணியை அடித்தது யார்?
4. யாருடைய தேர்க்காலில் பசுக்கன்று அகப்பட்டது?
5. அரசன் வழங்கிய தீர்ப்பு என்ன?

### அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| **மனுநீதி** | - | மனுதர்மம் |
| **மைந்தன்** | - | மகன், புத்திரன், புதல்வன் |
| **ஆராய்ச்சி மணி** | - | குறைகேள் மணி |
| **அமைச்சர்** | - | மந்திரி |
| **பிராயச்சித்தம்** | - | கழுவாய் |

## செயற்பாடு

**மனுநீதிச் சோழனின் கதையை ஆசிரியர் கூறக் கேளுங்கள்.**

**நாடகத்தைப் பாத்திரமேற்று நடியுங்கள்.**

**நாடகத்தைப் பாத்திரங்களாக மாறி வாசியுங்கள்.**

**அரும்பதங்களுக்கு அகராதியின் துணைகொண்டு பொருள் காணுங்கள்.**

**பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமையுங்கள்.**

1. நேர்ந்தது குறை யாருக்கு என்ன?
2. நடந்து தவறு விட்டது.
3. நிற்கிறீர்கள் குனிந்து தலை ஏன்.
4. அகப்பட்டு ஒன்று இறந்துவிட்டது பசுக்கன்று தேரில்
5. தலைகுனிந்து அமைச்சர் சென்றார் அவரிடம்

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி என்றும், பிழையாயின் பிழை என்றும் அடைப்புக் குறிக்குள் எழுதுங்கள்.**

1. இளவரசர் மணித் தேரில் உலாச் சென்றார். ( )
2. பசுக்கன்று தேரில் அகப்பட்டு இறந்துவிட்டது. ( )
3. அமைச்சர் அரசனிடம் தலைகுனிந்து செல்லவில்லை. ( )
4. அநபாய சோழன் நீதி வழுவாதவன். ( )
5. அரசன் மகனுக்குத் தண்டனை வழங்கவில்லை. ( )

**அரசனின் ஐந்து கடமைகளை எழுதுங்கள்**

## வேற்றுமை (தொடர்ச்சி)

சென்ற பாடத்தில் முதல் நான்கு வேற்றுமைகளைப் பற்றி நாங்கள் அறிந்து கொண்டோம். இப்பாடத்தில் மிகுதி நான்கு வேற்றுமைகளையும் அறிந்து கொள்வோம்.

அவை கீழே தரப்பட்டுள்ள அட்டவணை மூலம் விளக்கப்பட்டுள்ளன.

| வேற்றுமை | உருபு | சொல்லுருபு | பொருள் | உதாரணம் |
|---|---|---|---|---|
| 5 ஆம் வேற்றுமை | இல்<br>இன் | நின்று<br>இருந்து<br>நின்றும்<br>இருந்தும்<br>பார்க்க<br>பார்க்கிலும்<br>காட்டிலும் | நீக்கல்<br>ஒப்பு<br>எல்லை<br>ஏது | மலையின் வீழ் அருவி.<br>மலையில் வீழ் அருவி.<br>பாலின் வெளிது கொக்கு.<br>பாலில் வெளிது கொக்கு.<br>கொழும்பில் கிழக்கு அம்பாறை<br>அறிவின் உயர்ந்தவன் கவீந்திரன். |
| 6 ஆம் வேற்றுமை | அது<br>ஆது<br>அ | உடைய | உடைமை | அரவிந்தனது கை.<br>தனது கை.<br>மகேந்திரனுடைய மகன்.<br>ஆசிரியருடைய வருகை. |
| 7 ஆம் வேற்றுமை | கண்<br>இல்<br>உள்<br>இடம் | திசை<br>கால்<br>இடை | இடம் | மணியின் கண்ணுள்ள தொனி.<br>வீட்டில் உள்ள அறை.<br>காட்டுள் உள்ள மரம்.<br>மல்லிகாவிடம் அமைந்த பண்பு. |
| 8 ஆம் வேற்றுமை | | விளியுருபு<br>அவ்வாறு | விளித்தல் பொருள் | மகளே! கேள். (“ஏ” மிகுதல்)<br>மன்னனோ!நீயே.(“ஓ” பெறுதல்)<br>பிள்ளாய்! வருக. (“ஐ” ஆய் எனத் திரிதல்)<br>நண்பா! வருக.(ஈற்றயல் மிகுதல்)<br>அம்மா! வாருங்கள்.<br>தங்காய்! தாருங்கள்.<br>(“அய்” ஆய் எனத் திரிதல்) |

## செயற்பாடு

**பின்வரும் வாக்கியங்களிலுள்ள வேற்றுமையை இனங்கண்டு எழுதுங்கள்.**

1. **மகனே**! வா.
2. **மரத்தில்** இலை உண்டு.
3. **மாணவரது** வருகை நன்று.
4. **இலங்கை நாட்டினின்றும்** சென்றார்.
5. **அருணன்** வந்தான்.
6. **மாலா மரத்தை** நட்டாள்.

## நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உரையாடல்.

**சுதா** : அம்மா, எனக்குப் பசிக்கிறது.

**அம்மா** : உனக்கு விருப்பமான தோசையும் சம்பலும் இருக்கிறது போய்ச் சாப்பிடு.

**சுதா** : நான் பாடசாலைக்குப் போக வேண்டும். என் சீருடையைத் தாருங்கள்.

**அம்மா** : இதோ உன்னுடைய சீருடை.

**சுதா** : அம்மா, என் தண்ணீர்ப் போத்தலையும் புத்தகங்களையும் தாருங்கள்.

**அம்மா** : இதோ எடுத்து வைத்திருக்கிறேன்.

## பண்புடன் உரையாடல்

**குமார்** : தயவுசெய்து இக் கணக்கைச் செய்ய உதவி செய்வாயா?

**முரளி** : நிச்சயம் உதவி செய்வேன். காட்டு பார்க்கலாம்.

**குமாரி** : மிகவும் நன்றி. இதோ இவைதான்.

**முரளி** : நீயே ஒருமுறை முயன்று பார்க்கலாமே.

**குமார்** : நான் செய்து விட்டேன்.

**முரளி** : கெட்டிக்காரன் சரியாகச் செய்துவிட்டாய், என் பாராட்டுக்கள்.

**குமார்** : என்னை மன்னித்துவிடு உனக்குச் சிரமம் தந்துவிட்டேன்.

**முரளி** : சிரமம் இல்லை. நீ பரீட்சையில் வெற்றிபெற என் வாழ்த்துக்கள்.

## அன்றாடத் தேவைகளுக்கான உரையாடல்

நிதர்சன் : நீ மரக்கறி வாங்கச் சந்தைக்குப் சென்றாயா?

பிரவீன் : ஆம், நான் சந்தைக்குச் சென்றேன்.

பிரவீன் : நீ முத்திரை வாங்க அஞ்சலகம் சென்றாயா?

நிதர்சன் : ஆம், நான் அஞ்சலகம் சென்றேன்.

நிதர்சன் : நீ காசு வைப்பிட வங்கிக்குச் சென்றாயா?

பிரவீன் : ஆம், நான் வங்கிக்குச் சென்றேன்.

பிரவீன் : நீ பால்மா வாங்கப் பலசரக்குக் கடைக்குச் சென்றாயா?

நிதர்சன் : ஆம், நான் பலசரக்குக் கடைக்குச் சென்றேன்.

நிதர்சன் : நீ இன்று பாடசாலைக்கு பஸ்ஸில் சென்றாயா?

பிரவீன் : ஆம், நான் பாடசாலைக்கு பஸ்ஸில் சென்றேன்.